

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் நாமக்கல் மேற்கு மாவட்ட பா.ஜ.க. இளைஞரணி செயலாளர் சத்தியசீலன் தலைமையில் 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில்திருச்செங்கோடுநகரசெயலாளர்தா.கார்த்திகேயன், மல்லசமுத்திரம்பேரூர்செயலாளர்திருமலை, எலச்சிபாளையம்கிழக்குஒன்றியசெயலாளர்தங்கவேல், மேற்குஒன்றியசெயலாளர்செல்வராஜ், மாவட்டமாணவர்அணிதுணை அமைப்பாளர் தங்கமணி, முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜி.ஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாதவரத்தில் நல உதவிகள் வழங்கல்!

மாதவரம்,மார்ச் 5–

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டக் கழகத்தின் சார்பில் வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு ,ஆயிரம் பேருக்கு அறுசுவை பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். நிகழ்ச்சி துவங்குவதற்கு முன் உறுதிமொழி ஏற்று கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி முதலமைச்சரின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசைன் மைதீன், சுதாகர், அறிவழகன், பார்பன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.





கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் 80 அடி சாலையில், கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி தலைமையில், கழக கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம், மாநகரச் செயலாளர் எஸ்.பி. கனகராஜ் வரவேற்புரையில், மாவட்டத் துணைச் செயலாளர் பூவை ரமேஷ் பாபு நன்றியுரையில் நடைபெற்றது. வெள்ளம் போல் திரண்டு இருந்த கூட்டத்தினர்.

### சுனாமி குடியிருப்புகளைச் சீரமைத்திட வங்கிக் கடனுதவி தள்ளுபடி செய்திடக் கோரிக்கை! நாகப்பட்டினம்

# நம்பியார் நகர் மீனவ மக்களிடம் - முதல்வர் குறைகள் கேட்டறிந்தார்!

### பள்ளி சிறுவர் - சிறுமியர்களின் உற்சாக வரவேற்பை ஏற்று - அவர்களுடன் உரையாடினார்!

நாகை, மார்ச் 5-

நாகப்பட்டினம், நம்பியார் நகர் மீனவ கிராம மக்களைச் நேரில் சந்தித்து அவர்களின் தேவைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.3.2025) நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், நாகப்பட்டினம், நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகம் 34.30 கோடி ரூபாய் செலவில் படகு இறங்குதளம், படகு அணையும் சுவர், தெற்கு மற்றும் வடக்கு பக்க அலைதடுப்புச் சுவர்கள், முகத்துவாராம் ஆழப்படுத்துதல், தடுப்புச் சுவர் மற்றும் தெருவிளக்கு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு 9.3.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. மேலும், நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகத்தில் 700 மீட்டர் கடல் அரிமானம் ஏற்பட்டுள்ளதை தடுப்பதற்காக கூடுதலாக 4 நேர்கல் சுவர் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 8.3.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகத்தில் மீனவப் பெருமக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் சந்தித்து, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது மீனவர்கள், முதலமைச்சர் அவர்களிடம் சுனாமி குடியிருப்பு களை சீர்செய்து தர வேண்டும் என்றும், வங்கி கடனுதவிகளை தள்ளுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அப்போது, முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பின்னர், நம்பியார் நகரிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி சிறுவர், சிறுமியர்கள் அளித்த உற்சாக வரவேற்பினை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அச்சிறுவர், சிறுமியர்களுடன் உரையாடினார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷாநவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் 01.03.2025 அன்று நடைபெற்றது. உடன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. நே.பொன்மணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளினை முன்னிட்டு துணை முதலமைச்சர் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, இராசிபுரம் ஒன்றியம் சந்திரசேகரபுரம் பஞ்சாயத்தில் உள்ள அணைக்கும் கரங்கள் மனநல மறுவாழ்வு மையத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஏற்பாட்டில், இராசிபுரம் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.ஜெகநாதன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 84 பெண்களுக்கு உடமைகள், மின்விசிறி, போர்வை, பாய் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கி காலை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம் பொள்ளாச்சி வடக்கு மேற்கு ஒன்றியத்தின் சார்பில் அய்யம்பாளையம் சினேகாலயம் முதியோர் இல்லத்தில் உள்ள ஆதரவற்ற முதியோர்களுக்கு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் காலை உணவு வழங்கினார். பொள்ளாச்சி வடக்கு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழக மாநில தலைமை சட்டத்திருத்த குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு!

### வெளியுறவுத் துறை அமைச்சரை – மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் எம்.பி.க்கள் சந்தித்து வலியுறுத்துவர்!

# இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்கள் நிவாரணத் தொகை ரூ. 8 லட்சமாக உயர்வு! இலங்கைச் சிறையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு தின உதவித் தொகை ரூ.500 ரூபாயாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

நாகை,மார்ச் 5–

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் கைப்பற்றப்பட்டுள்ள மீன்பிடி படகுகளையும் மீட்டுத்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத ஒன்றிய அரசை கண்டித்தும், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தை சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் 28.02.2025 அன்று முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் – மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (03.03.2025) இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுவார்த்தையின்போது, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து எடுத்துரைத்தும், தங்களது கோரிக்கைகளை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, நிறைவேற்றி தருமாறு மீனவர் சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்கள் இன்று (03.03.2025) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட போது அப்பகுதியில் உள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள்.

கடந்த 18.02.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மீனவ பிரதிநிதிகளுடனான சந்திப்பின் அடிப்படையில், அம்மாவட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன்இறங்கு தளம் மீன்பிடித்துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துக்கல் மீன் இறங்கு தளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கு ரூ.360 கோடியினை ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஆணையிட்டுள்ளார்கள்.

இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அளித்த கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, இலங்கையில் நெடுங்காலமாக மீட்க இயலாத நிலையில் உள்ள மீன்பிடிவிசைப்படகுகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரண தொகையினை ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவி தொகையாக தற்போது நாளொன்றுக்கு 350 ரூபாய் வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன்றுக்கு 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் நிகழ்வுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகளவில் நடைபெறுவதுடன் அவர்கள் மீது சிறை தண்டனை விதிக்கப்படு வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களை உடனுக்குடன் விடுவிப்பது மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகளை மீட்டு தாயகம் கொண்டு வருவதை துரிதப்படுத்திடும் பொருட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் – மீனவர் நலத்துறை அமைச்சர், அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரநிதிகள் அடங்கிய குழு, விரைவில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் தர்மலிங்கம்

### மார்ச் 5 (1993)



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**